ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/50 - 2020 ජනවාරි මස 25 වැනි සෙනසුරාදා - 2020.01.25

*2159/50 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரின் பதவி, அனுமதி பெறாது மூன்று மாத காலத்திற்கு சபைக் கூட்டங்களுக்குத் தொடர்ந்து சமுகமளிக்காமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட அருளம்பலம் சுந்தரேசன் என்பவர் அங்கம் வகிக்கின்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

1A - G 31880 — 27 (2020/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இப்போது, வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான இராஜேந்திரம் கிறிஸ்ரி அமல்ராஜ் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் என்பவர் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

இ. கி. அமல்ராஜ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2020, சனவரி 24.

02-161

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.